சேர்க்கை அனுமதி எண்: ________

## முதலாமாண்டில் சேர்க்கை அனுமதியைப்பெறும் மாணாக்கரும் அவரது பெற்றோரும் அளிக்கும் உறுதிமொழி

பெரியார் பல்கலைக்கழகக் கலை அறிவியல் கல்லூரியில் ________________ பட்டப்படிப்பின் முதலாமாண்டில் சேர்க்கை அனுமதியைப்பெற்றுள்ள எங்களுடைய மகன்/மகள் ______________________ என்பவரின் விண்ணப்பப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள +2 தேர்ச்சி மதிப்பெண்கள், தேர்வுஎண், வயது மற்றும் சாதிச் சான்றிதழில் குறிப்பிடபெற்றுள்ள சாதி ஆகியன உண்மையானவை என்று உறுதியளிக்கின்றோம். அவை தவறானவை என பின்னர் கண்டுப்பிடிக்கப்பட்டால், படிப்புக் காலக்கட்டத்தின் எந்த நேரத்திலும் சேர்க்கை அனுமதி இரத்து செய்யப்படும் என்பதையும், விண்ணப்பதாராகிய என் மகன்/மகள் மீதும் பெற்றோராகிய எங்கள் மீதும் சட்டப்படியான ஒழுங்கு நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் நாங்கள் அறிந்துகொண்டோம். எங்கள் மகன்/மகள் ________________ கல்லூரியின் அனைத்து விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பார் என உறுதி அளிக்கின்றோம். கல்லூரியின் பொதுஅமைதிக்கும், சுற்றுபுறச் சூழலுக்கும் கேடு விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டாலோ, கல்லூரியின் உடமைகளுக்குச் சேதம் விளைவித்தாலோ எவ்வித முன்னறிவிப்பும் இன்றி என் மகன்/மகள் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். இக்கல்லூரியின் வேலை நாட்களில் 90% வருகைப்பதிவு தருவதற்கு என் மகன்/மகள் தவறினால் அவர் பல்கலைக்கழக தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார் என்றும், மாநில, மைய அரசின் உதவித் தொகை பெறுவதற்குரிய தகுதியை இழப்பார் என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டோம். ஆதலால் கல்லூரியின் வேலைநாட்களில் 90% வருகைப்பதிவு தருவதற்கு என் மகன்/மகள் தவறினால் அவருக்குத் தேர்வுப் பதிவு விண்ணப்பப் படிவம், மைய/மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவம் கல்லூரியிலிருந்து வழங்கப்படமாட்டாது என்பதையும் நாங்கள் அறிந்து கொண்டோம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை நன்குப் படித்து நாங்கள் தெரிந்து கொண்டோம்.

**பெற்றோர் கையொப்பம்** **மாணாக்கர் கையொப்பம்**

# பெரியார் பல்கலைக்கழகக் கலை, அறிவியல் கல்லூரி

(பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக்கல்லூரி)

மேட்டூர் – 636 401.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சமுதாய சீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும் விளங்கிய தந்தை பெரியார் பெயரில், தமிழக அரசு சேலம் மாநகரில் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாளில் பல்கலைக்கழகம் ஒன்றைத் தோற்றுவித்தது. அன்றைய **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற **பெரியார் பல்கலைக்கழகம்**, குறிப்பாக சேலம், நாமக்கல், தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கும் பொதுவாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் தரமான முதுநிலைக் கல்வியையும் ஆராய்ச்சிப் படிப்புகளையும் வழங்குவதைத் தம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியாகிய மேட்டூரிலும், மேட்டூரைச் சார்ந்த சிற்றூர்களிலும் வசிக்கும் எளிய மக்களின் பிள்ளைகள் பள்ளிப்படிப்புக்கு பிறகு உயர்கல்வியைப் பெறுவதற்காக, மேட்டூரிலிருந்து வெகு தொலைவிலுள்ள தருமபுரி, ஈரோடு, சேலம் முதலிய ஊர்களில் அமைந்துள்ள கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், பல மாணவர்கள் மேல்நிலைப்பள்ளிப் படிப்போடு, தம் கல்வியை நிறுத்தக் கூடிய சூழல் பன்னெடுங்காலமாக நிலவி வந்தமையை அறிந்த தமிழக அரசும், பெரியார் பல்கலைக்கழகமும், **பெரியார் பல்கலைக்கழகக் கலை அறிவியல் கல்லூரி** எனும் பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியை மேட்டூரில் 03.11.2006-இல் தோற்றுவித்தன. குறைவான கட்டணத்தில் தரமான உயர்கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இக்கல்லூரியில், எளிதில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்குரிய 10 இளநிலைப் பட்டப்படிப்புகளும், ஒரு முதுநிலைப்பட்டப் படிப்பும் நடத்தப்பெற்று வருகின்றன. மாணவர்களின் பன்முகவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் அயராதுழைக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல்திறன், நல்ல கட்டமைப்பு வசதி ஆகியன காரணமாக இக்கல்லூரில் தற்போது 1398 மாணாக்கர் பயின்று வருகின்றனர்.

**விண்ணப்பம் பெற்று நிறைவு செய்தல்:**

1. பட்ட வகுப்புக்கான அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் ரூபாய் 50 (ரூபாய் ஐம்பது) பதிவுக் கட்டணம் ரூ. 10/- ஆக ரூ. 60/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பட்டியல் இனத்தவர் (Scheduled Caste) மற்றும் பழங்குடியினர் (Scheduled Tribe) இனத்தவருக்கு விண்ணப்பக் கட்டணம், இல்லை. அவர்கள் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள மூலச் சாதிச் சான்றிதழ் கொண்டு வந்து இலவசமாக ஒரு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு பெறும்பொழுது சான்றொப்பமிட்ட சாதிச் சான்றிதழின் நகல் ஒன்றினைக் கொடுக்க வேண்டும்.
3. விண்ணப்பம் அனுப்புவோா் அடித்தல் திருத்தல் இல்லாமல் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தினையும், அதனுடன் கூடிய இணைப்புகளையும் நிறைவு செய்து நேரிலோ, பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **முதல்வர், பெரியார் பல்கலைக்கழகக் கலை அறிவியல் கல்லூரி, மேட்டூர் அணை – 636 401**
4. மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட 15 அரசு வேலை நாட்களுக்குள் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

   (Last Date for submission of filled in Application: ________________________)
5. காலங் கடந்து வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளபட மாட்டா.

**மாணவா் சேர்க்கை:**

1. பல்கலைக்கழக விதிகள் மற்றும் அரசு ஆணைகளுக்கேற்ப, மேல்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் பெற்ற மதிப்பெண், இடஒதுக்கீடு ஆகியனவற்றின் அடிப்படையில் மாணவா் சேர்க்கை நடைபெறும்.
2. கல்லூரியில் முதலாண்டு பட்ட வகுப்புச் சேர்க்கை மட்டுமே நடைபெறுகிறது. இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை.
3. பட்ட வகுப்பு மற்றும் முதுநிலைப் பட்டவகுப்பு அனைத்திலும் மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

4. முதுநிலைப் பட்டப்படிப்பு வகுப்பில் சேர்க்கைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள், பிற பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பைப் படித்திருப்பின் நேர்முகத் தேர்வுக்கு வரும் பொழுது தகுதிச் சான்றிதழை (Eligibility Certificate) பெரியார் பல்கலைக்கழகத்தில் பெற்று வருதல் வேண்டும்.

5. **விண்ணப்பத்துடன் இணைக்கபட வேண்டியவை:**

அ. தன் முகவரியிட்ட அஞ்சல் அட்டைகள் இரண்டு. ஆ) பாஸ்போாட் அளவு நிழற்படங்கள் மூன்று. இ. +2 மதிப்பெண் பட்டியலின் இரு சான்றொப்பமிடப்பெற்ற நிழற்பட நகல் (Attested Photostat copy).

ஈ. முற்பட்ட வகுப்பினரைத் தவிர, ஏனையோர் நிலையான சாதிச் சான்றிதழ்,

உ. மாறுகைச்சான்றிதழின் சான்றொப்பமிடப்பெற்ற நிழற்பட நகல் (Attested Photostat copy). ஊ. உடல் ஊனமுற்றவராயின், அது குறித்த மருத்துவா் சான்றிதழின் சான்றொப்பமிடப்பெற்ற நிழற்பட நகல் (Attested Photostat copy).

எ. தந்தை முன்னாள் இராணுவத்தினராயின் சான்றிதழின் சான்றொப்பமிடப்பெற்ற நிழற்பட நகல் (Attested Photostat copy).

**குறிப்பு: எக்காரணம் கொண்டும் மூலச் சான்றிதழ்களை (Original Certificate) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது.**

6. பல்கலைக்கழக விதிகள் மற்றும் அரசு ஆணைகளுக்கேற்ப மாணவா் சோ்க்கை, இடஒதுக்கீடு அடிப்படையிலும், மேல்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையிலும் மட்டுமே நடைபெறும். **எனவே சேர்க்கை தொடர்பாக எவரையும் அணுகுதல் கூடாது. அவ்வாறு செய்பவர்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

7. அரசுத் தேர்வுகளின் இயக்குனரால் மதிப்பெண் பட்டியல்கள் சரி பார்க்கப்பட்ட பின்னரே மாணவா் சோ்க்கை உறுதிப்படுத்தப்படும். மதிப்பெண் பட்டியல் பொய்யானது (Bogus) என்று தெரியவருமாயின் மாணவரது சேர்க்கை இரத்து செய்யப்படுவதோடு குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவா் என அறிவிக்கப்படுகிறது.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் சேர்க்கை நாளன்று கீழ்க்காணும் மூலச் சான்றிதழ்களைத் தவறாமல் கொண்டு வருதல் வேண்டும்.

அ. நேர்முகத் தேர்வு குறித்த அறிவிப்பு அட்டை.

ஆ. மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் சான்றிதழ்.

இ. மாறுகைச் சான்றிதழ் (T.C)

ஈ. சாதிச் சான்றிதழ்

**(நேர்முகத் தேர்வின்போது சாதிச் சான்றிதழ் இல்லை எனில், அரசு உத்திரவின்படி சேர்க்கை மறுக்கப்படும்)**

உ. முதல் பட்டதாரிக்கான சான்றிதழ் (தேவையிருப்பின்)

ஊ. வருமானச் சான்றிதழ் (கல்விச் சலுகை பெற விரும்புவோர்)

10. கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்களுடன் பெற்றோர் / பாதுகாவலர் வருதல் வேண்டும்.
11. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) மாணவர்கள் சேர்க்கையின் போது சாதிச்சான்றிதழ் நகல் மற்றும் தாம் முன்பு பயின்ற பள்ளியிலிருந்து வருகைப் பதிவுச் சான்றிதழ் பெற்று வரவேண்டும.
12. பிற்பட்டோர்.'.மிகவும் பிற்பட்டோர் நலத்துறை வழங்கும் கல்வி உதவித் தொகையையும், ஆதிதிராவிடர் நலத்துறை வழங்கும் உதவித்தொகையும் பெறுவதற்குத் தகுதியுடைய மாணாக்கர் கல்லூரியில் சேர்ந்த 10 நாட்களுக்குள் உதவித்தொகை விண்ணப்பப் படிவத்தை முறையாக, நிரப்பி தேவைப்படும் ஆவணங்களுடன் சமாப்பிக்கவேண்டும்.
13. உதவித்தொகை தமிழக அரசின் SC/ST, BC/MBC நலத்துறை அலுவலகத்தின் மூலம் நேரடியாக நுஊளு முறையில் வழங்கப்படுவதால், உதவித்தொகை வழங்குவதற்கு ஏதுவாக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் மேட்டூரக்கிளையில் கண்டிப்பாக சேமிப்புக் கணக்குத் தொடங்கி, சேமிப்பு கணக்குப் புத்தகத்தின் நகலைக் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை பெற்றுதர இயலாது.

**நடத்தப்பெறும் பட்டப்படிப்புகள், முதுநிலைப்பட்டப்படிப்பு**

பகுதி I தமிழ்

பகுதி II ஆங்கிலம்

| Sl.No | Under Graduate Course | Eligibility |
|---|---|---|
| 1. | B.A., Tamil<br>Allied I.Thamilaga Panpattu Varalaru<br>II. Tamil Molzhi Varalaru | Pass in H.Sc. examination |
| 2. | B.A., English<br>Allied I. Social History of England –I<br>II. Social History of England –II | Pass in H.Sc. examination |
| 3. | B.A. Economics<br>Allied I. Principles of Commerce<br>II. Principles of Accountancy | Pass in H.Sc. examination |
| 4. | B.Sc Computer Science<br>Allied I. Mathematics<br>II. Physics | A Pass in H.Sc. With Mathematics/ Business Mathematics / Statistics/ Business Statistics / Computer Science. |
| 5. | B.C.A<br>Allied I. Mathematics<br>II. Physics | A Pass in H.Sc. With Mathematics/ Business Mathematics / Statistics/ Business Statistics / Computer Science. |
| 6. | B.Sc . Mathematics<br>Allied I. Chemistry –I<br>II. Chemistry -II | A Pass in H.Sc. with Mathematics |
| 7. | B.Sc Applied Geology<br>Allied I. Chemistry –I<br>II. Chemistry -II | A pass in H.Sc. with Physics and Chemistry as compulsory subjects |
| 8. | B.Com.<br>Allied I. Business Economics<br>II. Indian Economy | A Pass in H.Sc with Commerce, Accountancy. |
| 9. | B.Com. Computer Application<br>Allied I. Business Application Software<br>II. Fundamentals of Computer and Cobal | A Pass in H.Sc with Mathematics/ Business Mathematics / Statistics/ Business Statistics/ Computer Science. |
| 10. | B.Com Electronic Banking<br>Allied I. Principles of Economics<br>II. Quantitative Techniques | A Pass in H.Sc with Mathematics/ Business Mathematics / Statistics/ Business Statistics/ Computer Science. |
| | **Post Graduate Course** | **Eligibility** |
| 1. | M.Com. Computer Applications | A pass in B.Com., B.Com CA.,B.Com E.B., B.B.M., B.B.A |